1989 ஏப்ரல் 29]

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்று கடந்த காலங்களில் அரசியல் நோக்கத்திற்காக சிறந்த திறமையானவர்கள் யார் பழி வாங்கப்பட்டிருந்தாலும் அவர்கள் மீண்டும் இந்த அரசிலே பதவி வேண்டுமென்று விண்ணப்பிப்பார்கள் என்று சொன்னால் முதலமைச்சரோடு கலந்து ஆலோசித்து அவர்களுக்கு மீண்டும் அந்தத் திறமையை தகுதியை பயன்படுத்திக் கொள்ள இந்த அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஈ) ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் தொழிலாளர்களுடைய பிரச்சினை குறித்த பேச்சு வார்த்தை.

திரு. எஸ். டி. உகம்சந்த் : பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்டாண்டர்டு மோட்டார்ஸினுடைய தொழிலாளர் பிரச்சினை கடந்த 3 மாதங்களாக இருந்து கொண்டு வருகின்றது. அங்கே கதவடைப்பு செய்யப்பட்டு 3 மாதங்கள் முடிய இருக்கிறது. அங்கு சுமார் 600 பேர்களுக்கு வேலை இழப்பு செய்வதற்காக நோட்டீஸ்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. அந்த 3 மாத கெடுவும் விரைவில் முடிய இருக்கிறது. வருகின்ற 2-ந் தேதி அந்தத் தொழிலாளர்கள் எல்லாம் சாலை மறியல் செய்ய இருக்கிறார்கள். அவர்களுக்கு அந்த கதவடைப்பானது சட்ட விரோத கதவடைப்பு என்று அரசு அறிவிக்கவில்லை என்று சொன்னாலும், விரைவிலே தீர்ப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னாலும் அரசே அந்தத் தொழிற்சாலையை ஏற்று நடத்துவதற்கு முன்வரவில்லை என்று சொன்னாலும், எல்லோருமே வேலையை இழக்கின்ற ஒரு நிலைமை ஏற்படும். இதை கருத்தில் கொண்டு உடனடியாக அந்தத் தொழிற்சாலையை அரசு மேற்கொள்ளுவதற்கு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் நிரம்ப விவரங்களை எதிர்பார்க்கிறார்கள். அவர் தெரிவித்த பல்வேறு கருத்துக்களின் அடிப்படையிலேதான் நாம் தொடர்ந்து தொழிலாளர்களோடும், நிர்வாகத் தரப்போடும் பேச்சுவார்த்தை செய்து கொண்டிருக்கிறோம். ஒரு சுமுகமான முடிவினை நாம் ஏற்படுத்த வேண்டும் என்கின்ற அடிப்படையிலேதான் தொடர்ந்து பல்வேறு கட்ட பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. வெகு விரைவிலே ஒரு நல்ல முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. கவன ஈர்ப்பு.

(அ) ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கு அம்பாசமுத்திரம் மதுரா கோட்ஸ் நிறுவனம் பணிக்கொடை வழங்காதது குறித்து.

*திரு. ரவி அருணன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ' ' அம்பாசமுத்திரத்திலுள்ள மதுரா கோட்ஸ் நிறுவனத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ள தொழிலாளர்களுக்குச் சேர